வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 14.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அசாமில் சுமார் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

ஹிந்தி வெறும் தொடர்பு மொழியாக மட்டுமல்லாமல், நாட்டின் அடையாளம் மற்றும் பாரம்பரியத்தை குறிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் இணைந்து தேசிய சுகாதார பிரச்சாரத்தை ஆயுஷ் அமைச்சகம் தொடக்கி உள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட மத்திய தகவல்- ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் பஞ்சாப் மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

*மோடி-அஸ்ஸாம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அசாமில் சுமார் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை மேம்பாட்டு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கும்

அடிக்கல் நாட்டினார். அம்மாநிலத்தின் Darrang மாவட்டத்தில் உள்ள Mangaldoi-ல் உரையாற்றிய பிரதமர் மேலும் கூறுகையில்...........

(வாய்ஸ்)

மோடி-அஸ்ஸாம்

(வாய்ஸ்)

இந்தியா உலகிலேயே மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நாடாகவும், குறிப்பாக அசாம் மாநிலம் நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாக மாறி உள்ளதாகவும் குறிப்பிட்டார். வளர்ந்த இந்தியாவை உருவாக்க நாடு ஒற்றுமையுடன் முன்னேறி வருவதாகவும் இதில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

Darrang-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் மற்றும் அம்மாநில முதலமைச்சர் திரு Himanta Biswa Sarma ஆகியோர் பங்கேற்றனர். அம்மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, GNM பள்ளி மற்றும் பிஎஸ்சி நர்சிங் கல்லூரி உள்ளிட்ட மேம்பாட்டு திட்டங்கள் மூலம் மருத்துவக் கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நகர்புற போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் மற்றும் தலைநகரை சுற்றி உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கான குவஹாத்தி ரிங் ரோட் திட்டத்திற்கும், பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே Kuruwa-Narengi பாலத்தின்

கட்டுமான பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். இன்று மாலை பிரதமர் அசாமில் 9 ஆயிரத்து 230 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு தொழில்முறை மேம்பாட்டு திட்டங்களைத் தொடக்கி வைத்து அடிக்கல் நாட்டினார். ஊடுறுவல் காரர்கள் மூலம் எல்லைப் பகுதிகளிலும் மக்கள் தொகையை மாற்ற சதி திட்டங்கள் நடந்து வருவதாகவும் இது, தேசிய பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் என்றும் பிரதமர் கூறினார்.

தூய்மையான எரிசக்தியை ஊக்குவித்தல் மற்றும் புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டை குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்ட Golaghat-ல் உள்ள Numaligarh சுத்திகரிப்பு ஆலையின் அசாம் பயோ-எத்தனால் தனியார் நிறுவனத்தையும் பிரதமர் திறந்து வைத்தார். இதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி சமூக பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, குவஹாத்தியில் நேற்று மாலை பாரத ரத்னா விருது பெற்ற பாடகரும் இசைக் கலைஞருமான டாக்டர் Bhupen Hazarika-வின் 100-ஆவது பிறந்த நாள் விழாவில் பிரதமர் பங்கேற்றார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் Bhupen Hazarika-வின் பாடல்கள் இந்தியாவை ஒன்றிணைத்து மக்களுக்கு ஊக்கமளிப்பதாக கூறினார். Bhupen Hazarika-விற்கு வழங்கப்பட்ட பாரத ரத்னா விருது வடகிழக்கு மாநிலங்களுக்கு ஒரு சிறந்த அங்கீகாரம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு

தெரிவித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் 100 ரூபாய் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

*ஓம் பிர்லா*

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது தொடர்பான நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற குழுவின் 2 நாள் தேசிய மாநாட்டை மக்களவை சபாநாயகர் திரு ஓம் பிர்லா இன்று தொடக்கி வைத்தார். ஆந்திரப் பிரதேச மாநிலம் திருப்பதியில் நடைபெற்ற இந்த மாநாட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் பெண்களின் சமமான பங்களிப்பால் மட்டுமே நாட்டின் முன்னேற்றம் சாத்தியமாகும் என்று கூறினார். மேலும் இம்மாநாட்டில் உரையாற்றிய அவர் மகளிரின் வளர்ச்சியை ஆதரிக்க பல வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் சட்டம் ஏற்கனவே அமல்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் எடுத்துரைத்தார்.

*ஹிந்தி தினம்*

நாடு முழுவதும் இன்று ஹிந்தி தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு .................

(வாய்ஸ்)

*ஹிந்தி தினம்*

(வாய்ஸ்)

ஹிந்தி தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். ஹிந்தி வெறும் தொடர்பு மொழி மட்டுமல்லாமல், நாட்டின் அடையாளம் மற்றும் பாரம்பரியத்தை குறிப்பதாக திகழ்கிறது என்றும் பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலக அரங்கில் ஹிந்தி மொழிக்கு அதிகரித்து வரும் பெருமை குறித்து எடுத்துரைத்தார்.

நாட்டின் மொழிகள் மற்றும் பேச்சு வழக்குகளுக்கு இடையே ஹிந்தி மொழி ஒரு பாலமாக செயல்படுகிறது என்றும், தொழில் நுட்பம், அறிவியல் மற்றும் ஆராய்ச்சியின் மொழியாகவும் ஹிந்தி வளர்ந்து வருகிறது என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். 2014-ஆம் ஆண்டு முதல் அலுவல் பணிகளில் ஹிந்தி மொழியின் பயன்பாடு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், டிஜிட்டல் இண்டியா, மின்-ஆளுமை, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்திய மொழிகளை ஊக்குவிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினார். நாட்டின் கலாச்சாரம் மற்றும் மரபுகளில் வளர்ந்து வரும் உலகளாவிய பயன்பாட்டில் ஹிந்தி ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மொழியின் மேம்பாடு மற்றும் அதில் ஈடுபட்டுள்ள மொழியியலார்கள் மற்றும் ஆர்வலர்களையும் தாம் வாழ்த்துவதாக டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.

ஆயுஷ்

பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட தேசிய சுகாதார பிரச்சாரமான Swasth Nari Sashakt Parivar Abhiyaan திட்டத்தில் ஆயுஷ் அமைச்சகம் பங்கேற்றுள்ளது. இந்த 16 நாள் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கம் பெண்களின் சுகாதார மேம்பாடு மற்றும் பல்வேறு நோய்களுக்கான பரிசோதனைகளில் கவனம் செலுத்துவதாகும்.

இந்த பிரச்சாரத்தில் புற்றுநோய், இரத்த சோகை, காசநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான சுகாதார பரிசோதனைகள் மற்றும் முகாம்கள் நடைபெற உள்ளன. மேலும் வாழ்க்கை முறை ஆலோசனைகள், யோகா பயிற்சிகள் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் பெண்களின் ஆரோக்கியம் வலிமை பெறும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. தினசரி ஆயுஷ் சுகாதார குறிப்புகளை வழங்குவதன் மூலமும், முழுமையான நல்வாழ்வை மேம்படுத்துவதன் மூலமும், கர்ப்பம் முதல் நோய் தடுப்பு சிகிச்சை வரை பெண்களுக்கு விரிவான சுகாதார பராமரிப்பை உறுதி செய்வதே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும். இதுகுறித்து மாநில மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்கள் மற்றும் ஆயுஷ் ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து ஆயுஷ் அமைச்சகம் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

எல் முருகன்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட மத்திய தகவல் -ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் பஞ்சாப் மாநிலத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். 2 நாள் பயணமாக பஞ்சாப் சென்றுள்ள அவர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைவரும் துணை நிற்க வேண்டிய நேரம் இது என்றும், அம்மாநிலத்திற்கும் அங்குள்ள மக்களுக்கும் மீட்பு நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் கூறினார். நிவாரணம் வழங்குவதில் மத்திய அரசு மாநில அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக கூறிய அவர் ஏற்கனவே அம்மாநிலத்தில் உள்ள 12 ஆயிரம் கோடி ரூபாயை முதலில் மாநில பேரிடர் மீட்பு நிதியின் கீழ் பயன்படுத்த வேண்டும் என்றும் தொடர்ந்து கூடுதல் நிதியை கோர அம்மாநில அரசு அதன் பயன்பாட்டுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெளிவு படுத்தினார். அமைச்சகங்களுக்கு இடையேயான குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்க பட்டவுடன் மாநிலத்திற்கான கூடுதல் நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட பகுதிகளை மதிப்பாய்வு செய்ய வரும் நாட்களில் மேலும் பல அமைச்சர்கள் பஞ்சாப்பிற்கு பயணம் மேற்கொள்வார்கள் என்றும் டாக்டர் எல் முருகன் கூறினார்.

ஜிஎஸ்டி

நாட்டு மக்களின் வாழ்க்கையை எளிதாக்க ஜிஎஸ்டி கவுன்சில் பல துறைகளில் வரி விகிதங்களை குறைத்துள்ளது என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. 56-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தின் சிறப்பு அம்சங்களை அறிவித்த மத்திய அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சுகாதார காப்பீட்டு பிரீமியங்கள் மீதான வரிக் குறைப்பு முக்கியத் துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என்று கூறினார். 18 சதவிகித ஜிஎஸ்டி வரியைக் கொண்ட சுகாதார காப்பீட்டு பிரிமியங்களுக்கு வரும் 22-ஆம் தேதி முதல் முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று மத்திய நிதி அமைச்சர் கூறி உள்ளார். இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தம் மூத்த குடிமக்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்றும் இந்த மாற்றம் நாடு முழுவதும் உள்ள குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு நிதி பாதுகாப்பை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரி குறைப்பு நடுத்தர குடும்பங்களுக்கு பிரீமியங்களை மலிவானதாக மாற்றி சுகாதார காப்பீட்டை மேலும் விரிவுபடுத்தும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி

புதுச்சேரி வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை சார்பில் 2025-26-ஆம் நிதியாண்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த உழவர்

உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது என்று கூடுதல் வேளாண் இயக்குநர் திரு ஜெய்சங்கர் செய்தி குறிப்பு வெளியிட்டுள்ளார். இந்த நிதி உதவி பெறுவதற்கான விண்ணப்பங்களை தகுதி உடையவர்கள் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரும் அக்டோபர் 17-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறி உள்ளார்.

விளையாட்டு

மகளிர் ஆசிய கோப்பைக்கான ஹாக்கி போட்டி சீனாவின் Hangzhou நகரில் இந்தியா-சீனா அணிகளுக்கு இடையே நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டி இந்திய நேரப்படி இன்று மாலை 5.30 மணிக்கு தொடங்கியது.

இங்கிலாந்தின் லிவர்பூலில் நடைபெற்ற உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன் ஷிப் போட்டி 2025-ல் இந்தியாவின் Jaismine Lamboria 57 கிலோ எடைப் பிரிவின் இறுதிப் போட்டியில் போலந்தின் ஜூலியாவை 4-க்கு 1 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

துபாயில் நடைபெறும் ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் நடைபெறும் உலக தடகள சாம்பியன் ஷிப் போட்டியின் 200 மீட்டர் ஸ்கேட்டிங் பிரிவில் இந்தியாவின் ஆரியன் பால் சிங் இறுதி சுற்றுக்கு முன்னேறி உள்ளார்.

பேங்காங்கில் நடைபெற்ற 11 வயதுகுட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Avni Janghu வெள்ளிப் பதக்கம் வென்றார்.

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அசாமில் சுமார் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

ஹிந்தி வெறும் தொடர்பு மொழியாக மட்டுமல்லாமல், நாட்டின் அடையாளம் மற்றும் பாரம்பரியத்தை குறிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் இணைந்து தேசிய சுகாதார பிரச்சாரத்தை ஆயுஷ் அமைச்சகம் தொடக்கி உள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட மத்திய தகவல்- ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் பஞ்சாப் மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 14.9.2025/Script/